

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியைத் திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்பந்திக்கும் ஒன்றிய பாசிச பாஜக அரசைக் கண்டித்து ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக மாணவர் அணி மற்றும் மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (FSO TN) இணைந்து கோவை சாயிபாபாகாலனி ஒன்றிய BSNL முதன்மை அலுவலகம் முன் மாவட்ட கழக செயலாளர்கள் நா. கார்த்திக் தொண்டாமுத்தூர் ரவி தளபதி முருகேசன் முன்னிலையில் மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சிவப்பிரகாசம் தலைமையில் செ.அந்தோணிராஜ் சூலூர் பிரபு வரவேற்புரையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். நடைபெற்றது . ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில மாணவர் அணி தலைவர் ராஜீவ்காந்தி மாணவர் அணி மாநில துணைச்செயலாளர் வி.ஜி.கோகுல் மற்றும் ASFபா. சினேகா, பாலமுரளி அவர்கள் மு.ராகுலன் கோவை அஜ்மத் அப்துல் காதிர் ஜல்வத்தி இள. கோபாலகிருஷ்ணன், மேயர் ரங்கநாயகி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில்

# பெரம்பலூர் நகர தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் சிறப்புரை!

பெரம்பலூர், மார்ச் 01,

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது!

பெரம்பலூர் நகர தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், நகர கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மார்ச் 01, அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் நகர கழகம் முழுவதும் கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், நகர் மன்ற துணைத் தலைவர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.அப்துல்கரீம், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், தொ.மு.ச.பேரவை மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 நிஜாம் காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 10 லட்ச மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை ( அங்காடி ) கட்டிடம் கட்டுவதற்கான பணியை துவக்கி வைத்தும் மற்றும் வார்டு எண் 2 பழனியப்பா நகர் 8 லட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய பேவர் பிளாக் சாலையை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா . இந்நிகழ்வில் மாநகர மேயர் செ திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி, கழக மூத்த வழக்கறிஞர் திரு. திருஞானசம்பந்தம், அவை தலைவர் ரெத்தினம் பொதுக்குழு உறுப்பினர்கள் சாத்தையா இராசு சந்தோஷ் மாமன்ற உறுப்பினர்கள் லதா கருணாநிதி பழனிவேலு, மதியழகன் பால்ராஜ், திருமதி ராஜஸ்வரி, வெற்றிசெல்வம், வட்ட கழக செயலாளர் சத்யா செல்வராஜ் கண்மணி சுப்பு ரமேஷ் உள்ளிட்ட மாநில மாவட்ட மாநகர ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பினர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் பிறந்தநாள்!

# திருப்பூர் மத்திய மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டக் கழக செயலாளர் - க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை!



திருப்பூர், மார்ச் 1 -

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின்72வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு - பல்லடம் சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய திருப்பூர் மத்திய மாவட்டம் முழுவதும் கழக கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என மாவட்டக் கழக பொறுப்பாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வ ராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், எல்லோருக்கும் எல்லாம் என்ற முழக்கத்துடன் ஓய்வின்றி மக்கள் பணியாற்றி வரும் தமிழக மக்களின் தாயுமானவரும், தமிழ்நாட்டின் முதலமைச்சரும், கழகத்தின் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளான மார்ச் மாதம் 1ம் தேதி அன்று திருப்பூர் தெற்கு - பல்லடம் சட்டமன்ற தொகுதிகளை உள்ளாட்டக்கிய திருப்பூர் மத்திய மாவட்டத்திற் குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழகம், வார்டு கழகம், ஊராட்சி கழகங்கள் என மாவட்டம் முழுவதும் கழக கொடியேற்றி, பொது மக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும், பல்வேறு முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநலக் காப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் வாழ்கின்றவர்களுக்கு காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், மாநகராட்சி, நகராட்சி, மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, உடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,

இலவச கண் மருத்துவ முகாம், இரத்த தான முகாம்கள் நடத்தியும் மார்ச் மாதம் முழுவதும் கபடி போட்டி, கிரிக்கெட் போட்டி போன்று பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்பாக நடத்திட வேண்டும் எனவும், முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக ஆற்றிவரும் தன்னலமற்ற உழைப்பையும், அவர் கழகத்திற்காக ஆற்றிய அரும் பெரும் பணிகளையும், திராவிட மாடல் அரசின் 4ஆண்டு கால ஆட்சியின் அளப்பறிய சாதனைகளையும், நாட்டு மக்களுக்கு விளக்கிடும் வகையில் மாவட்டக் கழகம் சார்பில் மார்ச் 4ம் தேதி முதல் மாதம் முழுவதும் திருப்பூர் தெற்கு - பல்லடம் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 60 இடங்களில் தொடர் தெரு முனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது, அதனை சிறப்பாக நடத்திட வேண்டுமெனவும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுசமயம் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கழக மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இந்நாள் - முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பொதுமக்களை திரளாக பங்கேற்க செய்து நிகழ்ச்சி களை சிறப்பாக கொண்டாடிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் மத்திய மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


## முரசொலி உரிமை விளக்கம்
## படிவம் – 4 விதி – 8

| | | |
|---|---|---|
| பிரசுரிக்கும் இடம் | – | முரசொலி அச்சகம், 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |
| பிரசுர முறை | – | நாளிதழ் |
| வெளியிடுபவர் & அச்சிடுபவர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| ஆசிரியர் பெயர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| இனம் | – | இந்தியன் |
| முகவரி | – | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |
| உரிமையாளர் பெயர் | – | முரசொலி அறக்கட்டளை |
| மற்றும் முகவரி | | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் நான்அறிந்த வகையில் உண்மையானவை என்று நம்பிக்கையுடன் கூறுகிறேன்.

சென்னை
01.03.2025

கார்த்திகேயன் சண்முகசுந்தரம்
(ஒப்பம்)
வெளியிடுபவர்


# தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாள் விழாவை நல உதவிகள் வழங்கி திருப்பூர் கிழக்கு - தெற்கு மாவட்டங்களில் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## பொறுப்பாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!





திருப்பூர், பிப். 28-

திருப்பூர் கிழக்கு தெற்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், மரக்கன்றுகள் நடுதல், ரத்த தானம் செய்தல், கழக கொடி ஏற்றுதல் என பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியாக கொண்டாடுவோம் என திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளரும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சருமான மு.பெ. சாமிநாதன், தெற்கு மாவட்ட செயலாளரும், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவருமான இல.பத்மநாபன் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:


தமிழ்நாட்டு மக்களின் இதயங்களை தன்பால் தன்வயப்படுத்தி தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கும் ஒப்பற்ற தலைவருக்கு பிறந்தநாள் விழா. இளமைக்காலம் முதல் இரு வண்ணக் கொடி ஏந்தி, இயக்கம் காத்து தொண்டராய் உழைத்து உழைத்து மாபெரும் இயக்கத்தின் மகத்தான தலைவராக உயர்ந்திட்ட உத்தமருக்கு பிறந்த நாள் விழா, இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களிலேயே சிறந்த முதல்வர் என பெயர் பெற்றிருந்தாலும், இந்தியாவின் சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான் என பெயர் பெறுவதுதான் நமக்கு பெருமை என சூளுரைத்து ஓயாமல் உழைத்துவரும் உன்னத தலைவர், உழைப்பால், தியாகத்தால், தொண்டால், அன்பால், நிர்வாகத் திறமையால், இமயம் என புகழ் பெற்றிருந்த போதும் நம்மை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் தடம் பற்றி தொண்டரோடு தொண்டராக களத்தில் நின்று இரு வண்ணக் கொடி ஏந்தி களமாடி வருகிற வரலாற்று தலைவனாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை எளியோர் பயன் பெறும் வகையில் நல உதவிகள் வழங்குதல், கண் தானம், ரத்த தானம் செய்தல், மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், நோயாளிகளுக்கு ரொட்டி பழங்கள் வழங்குதல், மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல், மரம் நடுதல், கழக கொடி ஏற்றுதல் மற்றும் கவியரங்கம், கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் நடத்துதல் என திருப்பூர் கிழக்கு மாவட்டதிற்குட்பட்ட காங்கேயம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளிலும், திருப்பூர் தெற்கு மாவட்டதிற்குட்பட்ட உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடிடுவோம்.

இதற்கான ஏற்பாடுகளை மாநில , மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளரும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சருமான மு.பெ.சாமிநாதன், தெற்கு மாவட்ட செயலாளரும், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவருமான இல.பத்மநாபன் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நடிகர் குமரி முத்து
### பிப்ரவரி 29 (2016)



தன்னுடைய இளம் வயதிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவினைக் கேட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நடிகவேள் எம்.ஆர்.இராதா நாடகக் குழுவில் நடித்து வந்த இவருடைய சிரிப்பே, இவரது புகழை அதிகப்படுத்தியுள்ளது.

கழக கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்த இவர், சிறந்த நகைச்சுவைப் பேச்சாளர்களில் ஒருவராகவும், குணச்சித்திர நடிகருமாக திகழ்ந்தவர்

திரைப்படங்களில் தன்னுடைய நடிப்புத் திறனை வெளிப்படுத்தியதால் “கலைமாமணி”, “கலைச்செல்வம்”, ஆகிய விருதுகளைப் பெற்றவர்.

2014ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் அவர்களின் கரங்களால் கலைஞர் விருது பெற்றவர். பகுத்தறிவுப் பாசறையாம் திராவிடர் கழகம் இவருக்கு “பெரியார் விருது” வழங்கி கௌரவித்துள்ளது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேராசிரியர் மா.இளஞ்செழியன்
### மார்ச் 1 (2009)



தி.மு.க. தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

தந்தை காஞ்சி மணிமொழியாருடன் இணைந்து 1947களில் ‘போர்வாள்’ சொந்தமாக நடத்தி, அதன் ஆசிரியராக செயல்பட்டவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் பேராசிரியாகவும், அதன்பின் கல்லூரி முதல்வராகவும் விளங்கிய இவர் ‘தமிழன் தொடுத்த போர்’, ‘அறிஞர் அண்ணாதுரை’, ‘ஈரோட்டுப் பாதை’ ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இளஞ்செழியன் நடத்திய ‘போர்வாள்’ ஏடு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் கரங்களில் போர்வாளாகவே மின்னிக் கொண்டிருந்தது.

“இளஞ்செழியன் எழுதிய ‘தமிழன் தொடுத்த போர்’ என்கின்ற அந்த நூலும், இன்னமும் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு நமக்கெல்லாம் பக்க பலமாக இருக்கக்கூடிய ஒரு பெட்டகம் ஆகும்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.